# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1607/13 - 2009 ජූනි 23 වැනි අඟහරුවාදා - 2009.06.23

*1607/13 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் வட்டறேகே ஆராச்சிலாகே விஸ்வ வர்ணபால ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, (2007, ஒற்றோபர் 18 ஆந் திகதிய 1519/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான கட்டளையாகிய இலங்கை, களனிப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் கட்டளைக்கான அட்டவணையை-

(1) அத்தகைய கருதப்பட்ட கட்டளைக்கான அட்டவணையின் நிரல் I இல் காணப்படும் மருத்துவ பீடம் என்ற விடயத்திற்கு நேரொத்ததாக உள்ள அவ்வட்டவணையின் நிரல் II இல் காணப்படும் 5 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

"5. மருத்துவ நுண்ணுயிரியல் துறை" ; அத்துடன்

(2) அட்டவணையின் நிரல் I இல் காணப்படும் மருத்துவ பீடம் என்ற விடயத்திற்கு நேரொத்ததாக உள்ள அவ்வட்டவணையின் நிரல் II இல் காணப்படும் 15 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும் :-

"16. இயலாமைக் கற்கைகள் துறை".

எனத் திருத்துகின்றேன்.

பேராசிரியர் வட்டறேகே ஆராச்சிலாகே விஸ்வ வர்ணபால,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2009, யூன் 17.

7 - 234